யட்டவத்த பிரதேச சபை - 2023

------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

யட்டவத்த பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யட்டவத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | 24 ஆம் பிரிவு | சபையால் பேணிச் செல்லப்படுகின்ற வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பெயர் பதிவேடொன்றில் குறிப்பிட்டு சபைக்குரிய அனைத்து வீதிகளை உள்ளடக்கி பதிவேடொன்ற நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | வீதி அளவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது முடிவடைந்தவுடன் வீதிப் பதிவேட்டை தயாரிப்பதற்கு எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | வீதிப் பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும் |
| (ii) | 128 ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமாக காணப்படும் 37 மயானங்களின் உரித்தினை கையேற்று வர்த்தமானில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசிற்கு உரிய மயானங்களை பிரதேச செயலகங்கள் மூலம் கையேற்க தேவையான நடவடிக்கை எடுத்துவருவதாக | கையேற்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1955/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட 1952 இன் 06 இம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட உப உறுப்புறை) சட்டம். | | | |
| (i) | கடுமையான மற்றும் அபாயகரமான வியாபாரங்கள் தொடர்பான உப உறுப்புரையின் 04 ஆம் பிரிவ | மீளாய்வாண்டின் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் 105 கடுமையான மற்றும் அபாயகரமான வியாபார நிறுவனங்கள் ரூபா 90,000 அனுமதிப்பத்திர வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டில் அவ்வாறான நிலைமைஉருவாகாத வகையில் வியாபார அனுமதிப்பத்தர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வருமான பரிசோதகருக்கும் விடய உத்தியோகத்தருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக | முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு முறையான அனுமதிப்பத்தர கட்டணங்களை அறவிட வேண்டும். |
| (ii) | முச்சக்கர வண்டிகளை நிறுத்திவைத்தல் தொடர்பான உப உறுப்புரையின் 4 (i) ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்க வேண்டிய இடங்கள் மற்றும் ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டி எண்ணிக்கை பொதுச் சபை மூலம் தீர்மானிக்கப்பட்டு அது வர்த்தமானி மூலம் வெளியிடப்பட வேண்டிய போதிரும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் பொதுச் சபை மீண்டும் கூட்டப்பட்ட பின்னர் அதில் சமர்ப்பித்து வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வர்த்தமானி மூலம் வெளியிட்டு வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதியுடைய 09/2009 ஆம் | உத்தியோகத்தர்களின் வருகை பதிவு செய்வதற்காக கைரேகை | பெறுகை வழிகாட்டலின் கீழ் கைவிரலடையால இயந்திர மொன்றை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | இயந்திரம் பயன்படுத்தப்பட வில்லை. | கொள்வனவு செய்வதற்கு விலை கோரல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02(அ) பந்தி | 8 மணித்தியாலயத்தை பூர்த்தி செய்யாத 06 விடுமுறை நாட்களுக்காக 4 உத்தியோ கத்தர்களுக்கு ரூபா 7,411 விடுமுறை தினப் படிகள் வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் விடுமுறை தின படிகள் தொடர்பாக இச்சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான 09 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை 1 ஆண்டிற்கும் 4 இற்கும் இடைப்பட்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | 09 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனையை விரைவில் மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,791,667 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,670,551 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,158,180 | 1,099,930 | 1,099,930 | - | 1,503,429 | 1,475,569 | 1,475,569 | - |
| (ii) | வாடகை | 1,345,777 | 1,148,251 | 1,131,119 | 48,132 | 1,219,554 | 1,048,506 | 1,048,506 | 31,000 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 923,748 | 936,468 | 936,468 | - | 687,030 | 677,750 | 652,030 | 9,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,688,305 | 1,780,585 | 1,697,420 | 408,385 | 1,599,730 | 1,651,440 | 1,692,390 | 325,220 |
| | மொத்தம் | 5,116,010 | 4,965,234 | 4,864,937 | 456,517 | 5,009,743 | 4,853,265 | 4,868,495 | 365,220 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர்க் கட்டணங்கள் | | |
| சபையால் நடாத்திச் செல்லப்படும் தற்போது செயலற்று காணப்படும் மாதியாபொல நீர் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 58 அலகுகளிலிருந்து ரூபா 101,845 ஆன நீர் கட்டணங்கள் தொகையை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை ரூபா 35,690 தொகை அறவிடப்பட்டுள்ளது. நிலுவையை அறவிடுவதற்காக ஒவ்வொரு மாதமும் நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் சபையின் வருமான பரிசோதகரால் வெளிக் களத்தில் நிலுவை தொகையை அறவீடு மேற்கொள்வதாக | பெறவேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |

### 2.3 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட ரூபா. 32,259 ஆன மிகை அறவீடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | தற்போதய நிலைமை தொடர்பாக விசாரித்து கடிதமொன்று உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் இதுவரை பதில் கிடைக்கவில்லை. | மிகை அறவீடு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தகனசாலையொன்று, பொது மலசலகூட மொன்று ஆயுர்வேத நிலையமொன்று மற்றும் பொது வியாபார சந்தையொன்றை நிர்மாணித்தல் தொடர்பில் கவனம் செலுத்தாமல் சபையின் மீண்டெழும் வருமானமான ரூபா 75,060,301 தொகையை 06 நிலையான வைப்புக்களிலும் சேமிப்புக் கணக்கிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மாத | **சுடலைசாலை நிர்மாணிப்பதற்காக அதிக கிரயமொன்று செலவிட நேர்வதால் பொது மலசலகூடமொன்றை அமைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக** | **பொது மக்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.** |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் யட்டவத்த பிரதேச சபைக் கட்டிடத்தில் சபை மண்டபத்தை நிர்மாண செயற்திட்டம் மதிப்பீட்டின் பிரகாரம் உரிய இடத்தில் நிர்மாணிக்காததன் பேரில் ரூபா 106,710 ஆன பிடித்து வைத்தல் தொகையை பிரதேச செயலகத்தினால் விடுவிக்காமல் இருக்கையில் சபையினால் 2016 ஆம் ஆண்டில் நிர்மாணக் கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்ட ரூபா 106,710 ஆன பிடித்து வைத்தல் தொகை சபை நிதியத்திற்கு மேலதிக செலவினமொன்றாக இருந்தது. | நி.பி 104(3) பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக | பொறுப்பான தரப்பினரிடமிருந்து குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 456,517 ஆக இருந்ததுடன். அதில் 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மீதி ரூபா 138,340 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 31,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் விநியோகிக்கப்படுகின்ற 40 கட்டிட அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களின் காலஎல்லை | செல்லுபடிக் காலம் முடிவடைந்த அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் | குறித்த செயற்பாட்டை பரீட்சித்து இணக்கச் |

| | | |
|---|---|---|
| மிகைத்திருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அனுமதிப் பத்திரங்களின் காலஎல்லையை நீடிப்பதற்கோ குடியிருந்தால் அதற்காக இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. | தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ள தாக | சான்றிதழ் வழங்குவதற்கு அல்லது முறையான நடைமுறைகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மார்ச் 19 ஆந் திகதி ரூபா 100,000 செலவில் தயாரிக்கப்பட்ட உயிர் வாயு அலகு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை விளைவற்று காணப்பட்டது. | இந்த உயிர் வாயு அலகினை அகற்றுவது பொருத்தமாதென பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக | திருத்தம் செய்த பயன்படுத்தவோ அல்லது அகற்ற பு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

.